1973 பிப்ரவரி 5]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஏற்கனவே அந்த முறை இருந்தது. சரியாக அமல்படுத்தப்படவில்லை என்ற காரணத்தாலும், மீனவச் சமுதாய மக்கள் பெரும்குறை தெரிவித்த தாலும், இந்தப் புதிய முறையை அரசு இப்போது கையாண்டு வருகிறது.

Drought relief measures.

* 10 *Q.*—THIRU K. T. K. THANGAMANI :
THIRU N. KITTAPPA :
THIRU D. S. A. SIVIPRAKASAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Revenue Board Members who toured the districts during August-September 1972 to study the drought conditions, have submitted their reports to the Government ; and

(*b*) if so, the relief given to the various areas, so affected ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) பாதகமான பருவ நிலையினால் பாதிக்கப்பட்ட வறட்சிப் பகுதிகளில் ஏற்கனவே உள்ள பொதுக் குடிநீர்க் கிணறுகளை ஆழப் படுத்த உடனடி நிவாரண நடவடிக்கையாக ரூபாய் 25 லட்சம் செலவிட வருவாய்த்துறையின் 10—9—1972 நாளிட்ட 2415-ஆம் எண் ஆணையின் வாயிலாக அரசு ஒப்பளிப்பு வழங்கியது. மேலும், இப்பகுதிகளில் அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய கடன்கள், நிலவரி, வேளாண்மை வருமான வரி வசூலிப்பதை 31—12—1972 வரை தள்ளிவைக்கும்படியும் அரசு ஆணையிட்டது.

பின்னர், 29—9—1972-ஆம் நாள் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், பாதகமான பருவ நிலைகளினால் பாதிக்கப்பட்ட வறட்சிப் பகுதிகளில் நிவாரணப் பணிகளுக்காக கூடுதலாக ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்குவதற்கு வருவாய்த்துறையின் 5—10—1972-ஆம் நாளிட்ட 2626-ஆம் எண் ஆணையில் அரசு ஒப்பளிப்பு வழங்கி யுள்ளது.

திரு. கே. டி. கே தங்கமணி : சார், ரெவின்யூ போர்டு மெம்பர்கள் தங்களுடைய பரிந்துரையில் கோவில்பட்டி, மற்றும் பல இடங்களைச் சுற்றிப் பார்த்து தனியாக ஆலோசனை கொடுத்து இருக்கிறார்களே, அந்த ஆலோசனை முழுவதையும் அரசு ஏற்றுக் கொண்டு விட்டதா, அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ரெவின்யூ போர்டு மெம்பர்கள் மொத்தமாக ஆலோசனை தந்து இருக்கிறார்கள். அந்த ஆலோசனையின் அடிப்படையில் மாவட்ட வாரியாக எவ்வளவு பணம் ஒதுக்கலாம், எவற்றிற்காக ஒதுக்கலாம் என்று பார்த்து அரசாங்கம் பணம் ஒதுக்கியிருக்கிறது. அவர்களுடைய ஆலோசனைப்படி ஆங்காங்கு நான் சொல்லிய மேற்கண்ட சலுகைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, ரெவின்யூ போர்டு மொத்தமாக ஆலோசனை தந்து இருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்திற்கு ஏதாவது செய்யவேண்டுமென்று பரிந்துரை செய்து இருக்கிறார்களா? அப்படிச் செய்து இருந்தால், அந்த மாவட்டத்திற்கு வழங்கப் பட்டிருக்கிற தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஏற்கனவே ரூ. 25 லட்சம் ஒதுக்கியபோது தஞ்சை மாவட்டத்திற்கு ரூ. 1 லட்சம் ஒதுக்கலாம் என்று அந்த வாரியத்தினர் சொன்னதன் அடிப்படையில் ஒதுக்கியிருக்கிறோம். பின்னர் ஒதுக்கிய ரூ. 1 கோடியில் தமிழ்நாடு பூராவிற்கும் இன்னின்ன காரியங்களுக்குப் பணம் ஒதுக்கவேண்டுமென்று சிபார்சு செய்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. தி. ச. ஆ. சிவப்பிரகாசம் : தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகள் வறட்சியால் பாதிக்கப் பட்டிருக்கிறது என்பதை அரசு அறிவிக்குமா? நெல்லை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மாவட்ட வாரியாக எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது என்ற தகவல் என்னிடத்தில் இல்லை. முதலில் ஒதுக்கிய ரூ. 25 லட்சத்தில் நெல்லை மாவட்டத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அதற்குப் பிறகு இன வாரியாக பணம் ஒதுக்கப்பட்ட, இன்னின்ன பகுதிகளில் இன்னின்ன வறட்சி நிவாரணப் பணி செய்ய வேண்டுமென்று வாரியம் சொல்லிய ஆலோசனையை அரசு அப்படியே ஒப்புக்கொண்டிருக்கிறது.

1973 பிப்ரவரி 5]

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது என்று சொன்னார்கள். அந்த ஒரு கோடி ரூபாயும் செலவழிக்கப்பட்டு விட்டதா, அல்லது இன்னும் எந்தெந்த மாவட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நாம் ஒதுக்கிய ஒரு கோடி ரூபாயும் செலவழிக்கப்பட்டு விட்டது. மத்திய அரசாங்கம் ரூ. 1½ கோடி வரையில் செலவழிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். மொத்தமாக இன்னும் கணக்கு பூர்த்தியாகவில்லை என்று கருதுகிறேன். மேற்கொண்டு தகவல் என்னிடத்தில் இல்லை.

கௌரவ மாஜிஸ்டிரேட்டுகள்

*11 வினா திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கௌரவ மாஜிஸ்டிரேட்டுகள் தற்போது எத்தனை பேர் உள்ளனர் ?

(இ) அவர்களுக்குச் சட்டப் பயிற்சி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) பேரவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(இ) கௌரவ மாஜிஸ்டிரேட்டுகளுக்குச் சட்டப் பயிற்சி அளிப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இந்த கௌரவ நீதிபதிகளும் நீதி வழங்குவதில் முக்கிய பங்கு வகிப்பதால் அவர்களுக்குச் சட்டப் பயிற்சி அளித்தால் நல்லது என்பதை அரசு கருதி நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

@ 203–206 ஆம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.)